## டிசம்பர் – 27 – புதன்

### திருத்தூதர் யோவான் - நற்செய்தியாளர்

### ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகம் மகிழ்வதாக! திபா. 97:1

### முதல் வாசகம் : 1 யோவான் 1 : 1 - 4

என் பிள்ளைகளே! தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம் கண்ணால் கண்டோம் உற்று நோக்கினோம் கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கிறோம். தந்தையோடு இருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த "நிலைவாழ்வு" பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம். தந்தையுடனும் அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களது மகிழ்ச்சி நிறைவடையுமாறு உங்களுக்கு இதை எழுதுகிறோம்.

**பதில்பாடல் :** நேர்மையாளர்களே ஆண்டவரில் களிகூருங்கள்

### நற்செய்தி : யோவான் 20 : 1 – 8

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!" என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச்சீடர் பேதுருவைவிட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார் ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச்சீடரும் உள்ளே சென்றார், கண்டார் நம்பினார்.

**தியானம் :** இன்றைய இறைவார்த்தைகள் அன்புறவையும், நிலைவாழ்வையும் பற்றி சிந்திக்க அழைக்கின்றது. இவ் அன்புறவை இறையன்பு, பிறரன்பு என்னு இரண்டு வகையாக இறைவனோடு கொண்டுள்ள அன்பை இறையன்பு என்றும், பிறரோடு கொண்டுள்ள அன்பை பிறரன்பு என்றும் பிரித்தும் பார்க்கின்றோம். ஆனால் நாங்கள் பிறரோட அன்பு கொண்டு வாழ்ந்தோமேயானால் இறைவனும் எங்களை அன்பு செய்கின்றார். அயலவர்க்கு உதவுதல், துன்பப்படுவோர்க்கு ஆறுதல் கூறுதல், பண உதவியோ, பொருள் உதவியோ இல்லாதவர்களுக்கு இயன்றவரை உதவி செய்தல் இவ்வாறு செய்யும் போது இறைவனுக்கே செய்கின்றோம் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அன்று நல்லசமாரியர் வீதியில் குற்றுயிராய் கிடந்தவருக்கு உதவி செய்து இறைவனின் அன்பில் நிலைத்திருந்தாரோ அதேபோன்று நாங்களும் இருக்க இறைவன் விரும்புகின்றார். ஆனால் நாங்களோ நான் மட்டும் வாழந்தால் போதும், எனது குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று சுயநலத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அவ்வாறு வாழாமல் ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு வாழ்வோம். இவ்வாறு வாழும் பொழுது எமக்கு நிலைவாழ்வானது நிற்சயம் உண்டு என்பது தெளிவாகின்றது. ஏனெனில் ஆதியிலே இருந்த வாக்கை நாங்கள் கண்டோம், தொட்டுணர்ந்தோம் என்றும் அதனால் தந்தை மகன் கொண்டுள்ள நட்புறவைப் பற்றியும் அதன் மூலம் கிடைக்கும் நிலைவாழ்வைப் பற்றியும் முதல் வாசகத்தில் கூறப்படுகின்றது. "நான் இறந்தோரின் கடவுளல்ல மாறாக வாழ்வோரின் கடவுள்" இதற்காகவே இறந்தவர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலின் போது அவர்களும் அவரவருக்கு ஏற்றவாறு உயிர்த்தெழுந்து விண்ணகத்தூதர்களாக இறைவனின் அரியணையில் இருப்பர் என்பதை இறைவார்த்தையில் பார்க்கின்றோம். அன்று இயேசுவை கல்லறைக்குள் காணவில்லை என்று மரியமதலேனால் சீடர்களுக்கு கூறியபோது அஞ்சி கலங்குகின்றார்கள். ஆனால் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்ற இறைவாக்கை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள். ஆனால் இறைமகன் இயேசு என்றும் கூடவே இருக்கின்றார் என்று பல தடவைகளில் வேதாகமத்தில் கூறுவதைப் பார்க்கிறோம். "அஞ்சாதீர் நான் என்றும் உங்களோடு இருக்கின்றேன்". எனவே இதை நம்பி ஏற்றுக் கொண்டவர்ளாக நிலைவாழ்வை பெற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.